ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2165/50 - 2020 මාර්තු මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.03.05
*2165/50 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இல.: 6/3/1/526.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், ஹொரணை பிரதேச செயலாளர் பிரிவில், ஒவிடியாகல எனும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை ஜனரால் அவர்களினால் தயாரிக்கப் பட்ட 2019.12.24 ஆந் திகதிய மு. பி. க. 4763 இல் துண்டு இல. 1, 2 ஆகக் காட்டப்பட்டிருக்கும் 4.0469 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய இரு காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

*1.* **துண்டு இல. 01**
காணியின் பெயர் : எல்லகந்ததோட்டம்; விபரம் : தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 0.0422 ஹெக்டயார்.

*2.* **துண்டு இல. 02**
காணியின் பெயர் : எல்லகந்ததோட்டம்; விபரம் : தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு; விஸ்தீரணம் : 4.0047 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹொரணை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. டீ. எஸ். சஜீவனா,
பிரதேச செயலாளர்,
ஹொரணை.

பிரதேச செயலகம்,
ஹொரணை.

*3 - 817*


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோப்பிலக்கம்: கடு/காணி/01/74/WS.

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2006/WS/329.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கடுவலை பிரதேச செயலகப் பிரிவில், 494பி, அரங்கல கிராம அலுவலர் பிரிவில், ஹோகன்தர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப நில வரைபடத்தின் இல. கொ. 9862 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 0.0016 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணிப்பகுதி : ஆரம்ப நில வரைபட இல. 9862 இல்.

1. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : கண்டறிய முடியவில்லை; விபரம் : சீமெந்துக் கால்வாய்; உரிமை கோருபவர் : கண்டறிய முடியவில்லை; விஸ்தீரணம் : 0.0016 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கடுவலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டி. வை. ஆனந்தனீ,
பிரதேச செயலாளர்,
கடுவலை.

பிரதேச செயலகம்,
கடுவலை.
2020, மாச்சு 02.

3 - 818